செ.வெ.எண்: 11 நாள்:09.11.2018

## நாகப்பட்டினம் மாவட்டம்

## மயிலாடுதுறை மற்றும் குத்தாலம் ஒன்றிய பகுதிகளில் வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்டப்பணிகள் குறித்து

## மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறை ஒன்றியம் சித்தர்காடு கிராமத்தில் ரூ.75.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் வேளாண்மை பொறியியல் விரிவாக்க மையத்தினையும், குத்தாலம் ஒன்றியம் எடக்குடி கிராமத்தில் வேளாண்மயமாக்கல் துணை திட்டத்தின் கீழ் வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் ரூ.25.00 இலட்சம் மதிப்புடைய வாடகை மையங்கள் ரூ.10.00 இலட்சம் மானிய உதவியுடன் அரசுமானியத்தில் அமைக்கப்பட்ட வேளாண்மை இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கும் மையத்தினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப., அவர்கள் (08.11.2018) அன்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பார்வையிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம், வேளாண் இயந்திரமயமாக்கும் துணைத் திட்டத்தின்கீழ் நடப்பு 2018-19-ம் நிதிஆண்டில், மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்குதல் மற்றும் வேளாண் இயந்திரங்கள் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையம் மானிய விலையில் அமைத்தல் முதலான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் 8 PTO குதிரைத் திறன் முதல் 70 PTO குதிரைத் திறன் வரை சக்தி கொண்ட டிராக்டர்கள், பவர்டில்லர், நெல்நடவு இயந்திரம் வைக்கோல் கட்டும் கருவி,கதிர் அறுக்கும் இயந்திரம்., சுழற்கலப்பை, விசைக் களையெடுப்பான், விதைக்கும் கருவி,வரப்பு அமைக்கும் கருவி, நிலம் சமன் செய்யும் கருவி,தட்டைவெட்டும் கருவி,விசைத்தெளிப்பான், டிராக்டரால் இயங்கும் தெளிப்பான், டிராக்டரால் இயங்கும் துகளாக்கும் கருவி மற்றும் மனித சக்தியால் இயக்கப்படும் கருவிகள் முதலான தனிப்பட்ட வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் மானியத்தில் பெற்றிட ஏதுவாக 115 எண்கள் டிராக்டர்கள், 178 எண்கள் பவர்டில்லர்கள், 14 எண்கள் நாற்றுநடும் கருவிகள் மற்றும் 636 எண்கள்

இதர வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்கிக் கொள்ள நடப்பாண்டில் ரூ.5 கோடியே 45 இலட்சங்களும், 12 எண்கள் வாடகை மையங்கள் அமைக்க ரூ.1 கோடியே 20 இலட்சமும் ஆக கூடுதலாக .ரூ.6 கோடியே 65 இலட்சங்கள் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மானிய விலையில் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் பெற விரும்பும் விவசாயிகள் உடனடியாக உழவன் செயலியில் பதிவு செய்து பயன்பெறலாம்.

மேலும் அதிக விலையுள்ள வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் குறைந்த வாடகையில் பெற்றிட, வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு வழங்கும் மையங்கள் மானிய உதவியுடன் அமைக்கப்படுகிறது. விவசாயிகள் விவசாயக் குழுக்கள் அல்லது தொழில் முனைவோர் ஆகியோர் பயனாளிகள் ஆவர். இவ்வாறான ரூ.25.00 இலட்சம் மதிப்புடைய வாடகை மையங்கள் அமைக்க 40 விழுக்காடு மானிய அடிப்படையில் அதிகபட்சமாக ரூ.10.00 இலட்சம் வரை மானியம் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்த ஆய்வின் போது வேளாண் பொறியியல்துறை செயற்பொறியாளர் (பொறுப்பு) திரு.செல்லக்கண் ஞானசீலன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மீ.செல்வகுமார், வேளாண் பொறியியல்துறை தொழில்நுட்ப அலுவலர் திரு.பாலசுப்ரமணியன், உதவிப் பொறியாளர்கள் திரு.மதிவாணன், ஸ்ரீதர், இராஜேந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**